# தமிழ்நாடு சென்ற அகதிகளை திருப்பி அனுப்ப

விலை ரூபா 3-00

University of Sri Lanka 1990-7-23 Periodicals Division Library


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 ஆடி: 7 துல் ஹஃதா: பிறை: 29 இதழ்: 154

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-07-1990



நல்லூர்க் கந்தன் திருவிழா

மில்க்வைற் விற்பனைநிலையத்தில்

ரூபா 25/-க்கு சோப் வாங்குவோர்க்கு அழகிய பொலித்தீன் பை, அகத்திக் கன்று, கரிசலாங் கண்ணி, கீரை விதை அன்பளிப்பு.

மேலுறைகளுக்கான அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

(A-816)


## ரஞ்சன் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து தமிழ்நாட்டுக்கு சென்றுள்ள அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன உரையாற்றுகையிலேயே மேற்படிகோரிக்கையை விடுத்தார்.

தமிழ்நாடு சென்றுள்ள அகதிகள் இலங்கை திரும்பும் பட்

[4-ம் பக்கம் பார்க்க]

# வட பகுதி யுத்தம்: 10 நாள் அவகாசம்

# கோருகின்றார் கொப்பேகடுவ!

## "அரசியல் தீர்வு காண்பது எனது வேலையல்ல!"

[கொழும்பு]

**வடபகுதி யுத்தத்துக்கு பத்து நாட்களில் தீர்வு தெரியும் என்று வட பகுதிக்கான இராணுவப் பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உறுதி தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலிருந்து வெளிவரும் 'லேக்ஹவுஸ்' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியிலேயே மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ மேற்படிக் கருத்தை வெளியிட்டார். இப் பேட்டியை அவர் வவுனியாவில் நேற்றுமுன்தினம் அளித்திருந்தார்.

''வடபகுதி யுத்தம் சம்பந்தப்பட்டமட்டில், அடுத்த 10 நாட்கள் மிக முக்கியமான நாட்களாகும். இந்த யுத்தத்தில் தீர்க்கமான முக்கியத்துவம் உள்ள நாட்களாக இந்த 10 நாட்களும் திகழப்போகின்றன'' என்று தெரிவித்த மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ மேலும் தெரிவித்ததாவது:

''யுத்தஇரகசியங்களை வெளியிடமுடியாது. ஆனால் உங்களுக்கு ஒரு தகவலை மட்டும் தருகிறேன். அடுத்த 10 நாட்களும் மிக முக்கியமான நாட்களாகும்.

''அரசியல் தீர்வு தேடுவது எங்கள் வேலையல்ல. அது அரசியல் வாதிகளின் வேலை. இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதே எமது வேலையாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## குறிஞ்சாத்தீவு நிலைமை

(கிளிநொச்சி)

ஆனையிறவு - குறிஞ்சாத்தீவு பகுதியில் இராணுவம் தரையிறங்கியதையடுத்து அப் பகுதியில் உக்கிர சண்டை

(4ம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலில் மூவர் பலி

(கிளிநொச்சி)

பரந்தனில் கடந்த வெள்ளி நடந்த விமானத் தாக்குதல் இடம்பெற்றதில் ஒரு மெக்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு பெண்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

செட்டிகுளத்தில் பொம்மர் தாக்கியதில், இரு பெண்கள் படுகாயமடைந்தனர் இச்சம்பவம் நேற்று முன்தினம் 11-30 மணியளவில் நடைபெற்றது.

(வி)

## மன்னாரில் புலிகள் கைப்பற்றிய கவச வாகனம் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

மன்னார் கொண்டாச்சி இராணுவ முகாம்மீது கடந்த மாதம் 21-ம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில், இலங்கை இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு பாதை தகர்க்கப்பட்டது!

### போக்குவரத்து முற்றாகத் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப்பாதை, பெரும் பகுதி சக்தி வாய்ந்த குண்டினால் தகர்க்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு சகல போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை இந்தப் பாதை தகர்க்கப்பட்டதால் போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை.

கேரதீவு சங்குப்பிட்டி பாதைகளும் பொம்மர் தாக்குதலினால் பலத்த சேதமடைந்து, போக்குவரத்து சேவை முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாண மக்கள், கேரதீவு மூலமாகவோ, ஆனையிறவு மூலமாகவோ தென்பகுதி செல்லும் முயற்சி யாவும் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

## புலிகளிடம் சரணடைந்த 17 பொலிஸார் விடுதலை

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் புலிகள், கைது செய்த பொலிஸாரையும், இராணுவத்தையும் கொலை செய்து வருகிறார்கள் என இலங்கை அரசாங்கம் தற்போது பொய்பிரசாரம் செய்துவருகின்றது. எம்மிடம் சரணடைந்த அனைவரையும் நாம் மிகவும் கண்ணியத்துடன் பாதுகாத்து வருகின்

(4-ம் பக்கம் பார்க்க)



கொக்காவில் தாக்குதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்தவர்களையே இப்புகைப்படங்கள் உணர்த்துகின்றன. படங்களில் காணப்படுபவர்கள் விபரம்: கப்டன் உஷா (இ. வனிதாம்பிகை, முள்ளியவளை), 2-ம் லெப். மாலா (அ. ஸ்ரீமதி, வல்வெட்டித்துறை), 2-ம் லெப்: சாளினி (அ. நவநீலவதனா வல்வெட்டித்துறை), 2-ம் லெப்: பிரியங்கா (வி. குமுதினி, வல்வெட்டித்துறை), 2-ம் லெப்: குமாரி (க. ரட்ணம்பாள் திரியாய்), 2-ம் லெப்: அஜந்தா (த. சுசிலா கல்வியங்காடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் பெருக்க நிதிஉதவி அவசியமாகும்" - யோகி

(கொக்குவில்)

'ஸ்ரீலங்கா அரசு முன்னர் கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்து வந்தனர். இதனால் தான் நாம் ஆயுதமேந்தி எமது மக்களையும் மண்ணையும் காப்பாற்றி வருகிறோம்.

கொக்குவில் மேற்கு ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையில் கடந்த வியாழக்கிழமை நடந்த தமிழீழமீட்பு நிதி கடன் பத்திரம் வழங்கும் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது:

இன்று எமது தமிழ் மண்ணை மீட்பதற்கு சிங்கள வான் கடல், தரை காவற்றுறை, காடையர்கள் படையுடன் நாம் மோதுகின்றோம். இப்படைகளிற்கு அரசு பல கோடி ரூபாக்களை ஒதுக்கியுள்ளது. மேலும் ஒதுக்கியும் வருகிறது. நாம் வெளிநாட்டு உதவிகளை எதிர்பாராது நாமே நம்மை தயார்ப்படுத்த சகலமக்களும் தம்மால் இயன்ற உதவிகளை செய்ய முன்வர வேண்டும். எமது ஆட்பலத்தையும் ஆயுதபலத்தையும் பெருக்க பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எனவே எமது திட்டத்தில் மீளச் செலுத்தும் கடன் திட்டத்தினை முதன்முதலாக செயல் முறைக்கு கொண்டு வந்துள்தோம் என்றார்.

## றோட்டரி - இன்றாக் கழகங்கள் இணைந்து அகதிகளுக்கு உதவி!

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டரிக்கழகம் இன்றறக்ட் கழகங்களுடன் இணைந்து குடாநாட்டிலுள்ள அகதிகளுக்கு பெறுமதி வாய்ந்த உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம். யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இயங்கும் இன்றாக்ட் கழகங்களிலுள்ள மாணவர்களின் உதவியினால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் ஒரு தொகுதி வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக அகதி முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

21 ஆயிரத்து 862 உடைகள், 36 1/2 மூடை அரிசி, 499 பால் மா பைக்கற்றுக்கள், 2682 தேங்காய், 880 சவர்க்காரம், 2 மூடை அரிசிமா உட்பட பல பொருள்கள் றோட்டரிக்கழகத்தினால் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் சங்க கூட்டம் இம்மாதம் 25-ம் திகதி சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (து)

## ஆசிரியர்கள் சம்பளம்

(நாவற்குழி)

ஆசிரியர்களுக்குரிய மாதச் சம்பளத்திற்குரிய பணம் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ள போதிலும் இது வரையும் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (107)

## கிழங்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தான் உற்பத்தி செய்த பீற்றூட் கிழங்கில் 5 மூடை கிழங்கை அகதிகளுக்கு சமைத்துக்கொடுப்பதற்காக அன்பளிப்புச் செய்துள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த மேற்படி விவசாயி அக்கிழங்கினைநேற்றுமுன் தினம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ளார். (56)

## இராசி பலன்

23-07-90
திங்கட்கிழமை

பிரதமை மு. ப. 8-01 வரை; ஆயிலியம் பி. இ. 5-15 வரை, சித்தயோகம், இராகு காலம் காலம் காலை 7.32 முதல் 9.32 வரை.

நல்ல நேரம் 12-02 முதல் 1.32 வரை.

மேஷம்-வைத்தியச் செலவு, தைரியச் குறைவு, பெரியோர் அறிவுரை, தொழில் பாதிப்பு.

இடபம்:- காரிய பலிதம், பிரயாணம், தொழில் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி.

மிதுனம்: தப்பபிப்பிராயம், கடும் கோபம், குடும்பக்கவலை, அதிக செலவு.

கடகம்: கடும் யோசனை, தொழில் லாபம், உடலாரோக்கியம், விருந்தினர் வருகை.

சிங்கம்: ஏமாற்றப்படுதல், தொழில் பிணக்கு, அந்நியர் பகை, வீட்டில் துன்பம்.

கன்னி: எதிர்பாராத சந்திப்பு, மனநிறைவு, குடும்ப மகிழ்ச்சி, கல்வி ஞானம்.

துலாம்; தொழில் அலைச்சல், சகோதரர் வெறுப்பு, எதிரிகள் உறவு, கருத்து முரண்பாடு.

விருச்சிகம்: எதிர்பார்த்ததில் தடை. பணமுடை, மனை

(3-ம் பக்கம் பார்க்க)

## ஆலோசனைசபை

(யாழ்ப்பாணம்)

கைதடி இரட்சனியசேவை முகாமினை நிர்வகிக்கும் பொருட்டு தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தினால் ஆலோசனைச்சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆலோசனைச் சபையில் பின்வருவோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எஸ். சுப்பிரமணியம். கே. கோபாலகிருஷ்ணன், ப. செல்லத்துரை, டபிள்யூ. சாமுவேல், இ. கந்தசாமி, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி.

## தகவல் தாருங்கள்

திருகோணமலை இராஜவரோதயம் வீதியைச் சேர்ந்த திருமதி தா. இராசரத்தினம், திருமதி மலர்தேவி குடும்பத்தினரை ஆனைப்பந்தியைச் சேர்ந்த கைலாயபிள்ளை சரோஜினி தேடுகிறார். இவர்களது மகன் இ. கணேசன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

கல்முனை உடையார் வீதியைச் சேர்ந்த டாக்டர் பொ. சந்திரசேகரம் குடும்பத்திரை ஆனைப் பந்தி கைலாயபிள்ளை சரோஜினி தேடுகின்றார்.

# "க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றுபவர்கள் விரோதிகளாககருதப்படுவர்" - மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றுபவர்களோ அல்லது பரீட்சையை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களோ எமது விரோதிகளாகவே கருதப்படுவர்.'

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வடக்கு-கிழக்கில் கா.பொ.த (உயர்தர) பர்ட்சையை தற்போதைய பாதகமான சூழ்நிலையை குறிப்பிட்டு ஒத்திவைப்பதற்கு தமிழ் பேசும் மாணவர்கள் இன பிரதேச கருத்து வேறுபாடுகளை மறந்து அரசுக்கு எதிராக போராடுகிறவர்கள்இவ்வாறு ஒத்திவைக்காத சந்தர்ப்பத்தில் பகிஸ்கரிப்பதெனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பரீட்சையை பகிஷ்கரிக்கும் போது சில பாதகமான விளைவுகள் மாணவராகிய எமக்கு ஏற்படும் என்பதை அறிவோம். ஆனால் இலங்கை அரசினால் பல்வேறு காலகட்டங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளினால் மாணவர்களாகிய நாம் பாதிப்படைந்துள்ளோம் இவ்வாறு அடக்கு முறைகளுக்கும் பாதிப்புகளுக்கும் மாணவர்கள் ஆகிய நாம் தொடர்ந்து ஆழாவதை எம்மால் அனுமதிக்கமுடியாது. ஆகவே பாதிப்புக்களிருந்தாலும் மாணவர்கள் இப்போராட்டத்தினை முன்னெடுப்பது தவிர்க்கமுயாததாகும்.

தமிழ் பேசும் மாணவர் ஒன்றிய அமைப்புக்குழு கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களங்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் பரீட்சை நடாத்துவதற்கான எந்த நிர்வாக நடவடிக்கையிலும் ஈடுபடாமல் ஒத்துழைப்பை கோருதல்,

எமது கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கு

(3ம் பக்கம் பார்க்க)

# போராளிகள் போல் நடித்து பாடசாலை உபகரணங்களை திருடியஇருகொள்ளையர்கள்

(வட்டுக்கோட்டை)

இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுக்கப் போகிறோம் என்று கூறி, இயக்கப் போராளிகளைப்போல நடித்த இரண்டு திருடர்கள் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு தையல் மெஷின்களையும் 'பப்ளின்' துணிவகைகளையும் மரவேலை உபகரணங்களையும் திருடிச்சென்ற சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை பகல் 10-30 மணியளவில் மேற்படி கல்லூரிக்குச் சென்று அங்கிருந்த பாதுகாவலரிடம் தாம் இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சியும் முதலுதவிப் பயிற்சியும் கொடுக்கப்போகிறோம் என்று இரண்டு இளைஞர்கள் கூறினராம்.

பாதுகாவலரும் அவர்களது கூற்றை நம்பிவெளியே சென்றதும் திருடர்கள் இருவரும் நண்பகல் நேரத்தில் தையல் மெஷின்கள் வைக்கப்பட்டிருந்த சித்திரபாட அறையினதும் மரவேலைப்பாட அறையினதும் கதவை உடைத்து அங்கு உட்புகுந்து அங்கிருந்த சிங்கர் மெஷின்களையும், பப்ளின் துணிவகைகளையும் மரவேலை உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனராம்.

இது பற்றி இரவு நேரப் பாதுகாவலர் அதிபருக்குத் தெரிவித்ததை அடுத்து அதிபர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டுகோட்டைப் பிரதேசக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (139)

# தொழிலாளர் நிலை குறித்து ஒப்பந்தகாரர் சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அகதிகள் நிலை, சங்க அங்கத்தவர்களின் வேலைத்தல ஊழியர்களின் நிலை ஆகிய விடயங்கள் விசேட கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஊழியரின் வேதனம் வழங்குவதில் ஒப்பந்தக்காரர் முகங்கொடுக்கும் நிதியின்மைக்கு முக்கிய காரணம் அவர்கள் ஒப்பந்த வேலை மேற்கொண்ட திணைக்களங்களிடமிருந்து கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறுமையே என்று அனைவராலும் காரணம் காட்டப்பட்டது.

இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் ஏறக்குறைய 80க்கும் 100க்கும் இடைப்பட்ட ஒப்பந்தக்காரரின் ஒவ்வொரு வேலைத்தலத்திலும் உள்ள சராசரி 50 தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்ளென்றும், இது அவர்களின் குடும்பங்களில் பாரிய பொருளாதார நெருக்கடியை உருவாக்கி அவர்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவது உறுதி என கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

# 'மண் மீட்பிற்காக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை புலிகளிடம்ஒப்படைக்கிறார்கள்' மகளிர் முன்னணி சுந்தரி

(வடமராட்சி)

''எமது மண்ணின் மீட்பிற்காக பல பெற்றோர் தமது பிள்ளைகளை மக்கள் படையான தமிழ் ஈழ விடுதலைப் புலிகளாகிய எம்மிடம் ஒப்படைக்கின்றார்கள். சில இடங்களில் வீட்டிற்கு ஒருவர் அல்ல இரு பிள்ளைகளைக்கூட ஒப்படைக்கின்றார்கள்.'' என்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் துணைச் செயலாளர் சுந்தரி, நெடிய காட்டில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் கூறினார்.

வல்வை நெடியகாடு விளையாட்டரங்கில் கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் விஜேத், கப்டன் கொலின்ஸ்ட் ஆகியோரின் எட்டாம் நாள் நினைவாக அஞ்சலிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது: இது காலம் காலமாக எமது மூதாதையர்களால் காப்பாற்றப்பட்ட தமிழ் ஈழ மண் இன்று எமது தமிழ் ஈழ மண் சிங்கள அரசினால் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டு வருகின்றது இதை நாம் கண்டும் காணமல் இருக்கமுடியாது. எமது மண்ணின் மீட்பிற்காகவே நாம் ஆண் பெண் என்று பலரும் இளம் வயதில் உள்ளவர் முதல் முதியவர் வரை போராளிகள் வரை பங்களிக்கின்றோம்.

திருமலை, மன்னார் போன்ற மாவட்டங்களில் உள்ளோர் அன்று முதல் இன்று வரை அகதிகளாக உள்ளவர்கள் கூட தமது பிள்ளைகளில் இருவர்களைக்கூட எமது போராட்டத்திற்குத் தருகின்றார்கள்.

ஆனால் யாழ் மாவட்ட மக்கள் எம்மைத்தேடி வரும் பிள்ளைகளைக்கூட எம்மிடம் இருந்து பிரித்துச் செல்வதிலேயே கண்ணுக உள்ளார்கள். உங்கள் பிள்ளைகள்தான் பிள்ளைகளா நீங்கள் மட்டும் தான் பாசம் உள்ளவர்களா ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குப்பாசம் இல்லையா? தயவுசெய்து எமது அடுத்த சந்ததியை ஆவது இன்று நடைபெறும் இரத்தம் சிந்தும் வேதனை நிரம்பிய துன்பத்தில் இருந்து நிம்மதியாக சந்தோசமாக வாழ துணைபுரியுங்கள் இனியாவது எம்மைத் தேடி ஓடிவரும் பிள்ளைகளைத் தடுக்காதீர்கள் உங்கள் பிள்ளைகளை மட்டுமல்ல விடுதலைப்புலிகளில் அனைவரும் உங்கள் பிள்ளைகள் என்று நினையுங்கள் என்று தெரிவித்தார்.

திரு. எஸ். கருணனந்தராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிப் பொதுக் கூட்டத்தில் குணம், வாஞ்சிநாதன், றஞ்சனதாஸ், யோகி, செங்கதிர், சூசை ஆகியோரும் உரையாற்றினர். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மூல வளங்களைப் பயன்படுத்தி

# நெருக்கடி நிலையிலும் வாழப் பழகுவோம்

அன்னிய கலாச்சாரத்தின் பாதிப்பினால் எமது பழக்க வழக்கங்களும் மாறுபட்டுள்ளதானால் அவற்றிலிருந்து விடுபட முடியாமல் தவிக்க வேண்டிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

நாங்கள் தமிழர்கள் எங்களுக்கென்றொரு கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னாலும் நடைமுறையில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

இதனால் தான் சிறிலங்கா அரசின் திடீர் பொருளாதாரத்தடை எம்மை பாதித்திருக்கிறது.

மற்றவர்களுடைய பழக்க வழக்கங்களை அப்படியே கடைப்பிடிக்க பழகி விட்ட நாம் எமது கலாச்சாரத்தை

**என். கே. துரைசிங்கம்**

பரப்பி இருக்கிறோமா என்றால் அது கேள்விக்குறியாகதான் இருக்கிறது.

### அன்னிய பாதிப்பு

உணவுப் பண்டங்கள் தொட்டு உடுப்புகள் வரை அனைத்தும் அன்னிய பாதிப்புக்கள் இருப்பதனை எங்களிடையே நேரடியாக காண முடிகிறது.

கொழும்பு தொடர்பு ஒரு நாள் இல்லா விட்டால் எமது பகுதியில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்ற அளவிற்கு நாங்கள் மற்றவர்களை எதிர்பார்த்து வாழப் பழகி விட்டோம்.

### உள்ளூர் உற்பத்தி

இந்த நிலை இனிமேலும் தொடராமலிருக்க வேண்டுமானால் உடனடியாக உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களையும் மற்றும் அத்தியாவசியமானவற்றையும் பெருக்குவதற்கான முயற்சிகளில் எமது அனைத்துச் சக்திகளையும் பயன் படுத்த வேண்டும்.

### வீட்டுக்கு வீடு

வீட்டுக்கு வீடு விவசாயம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது ஒவ்வொரு பகுதியின் மண்ணைப் பொறுத்து அதற்கேற்றதான பயிர்களை நாட்டி உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

இப்பயிர்ச் செய்கையின் போது உடனடியாக பயன் தரக்கூடியபயிர்வகைகளை நாட்டுதல் சாலச்சிறந்ததாகும்.

### தயார் படுத்துவோம்

ஒரு யுத்த காலமாக இருக்கின்ற காரணத்தால் யுத்தம் எப்போது நிற்கும் என்று சொல்ல முடியாது. சிலவேளைகளில் இது ஒரு நீண்டகாலப் போராகவும் இருக்கலாம் இதற்காக நாமும் எல்லா வகையிலும் எம்மை தயார் படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

### தேவைகளை குறைப்போம்

வழமையான காலத்தில் நாங்கள் பல தேவைகளை அனுபவித்தார்களாக இருக்கலாம் ஆனால் அவற்றை இப்பொழுது மெல்ல மெல்ல குறைக்கப் பழகவேண்டும். அத்துடன் சிலதேவைகளையும் நாமே வலிந்து தேடிக் கொள்கிறோம்' அவற்றை இந்தக் காலத்தில் ஓரளவுக்கேனும் குறைக்கப் பழகவேண்டும்.

### சுகாதார பழக்கம்

எம்மால் கடைப்பிடிக்கக் கூடிய சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்காமையினால் அவற்றின் விளைவு மிகவும் பாரதூரமாகி ஆபத்து ஏற்படக்கூடியதாக அமையலாம்.

வைத்தியசாலைகளும் தற்பொழுது இயங்க முடியாத நிலையிலில்லாததாலும் அப்படி இயங்கினாலும் அங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதாலும் எமக்கு ஏற்படக்கூடிய நோய்களை நல்ல சுகாதார பழக்கத்தை கடைப்பிடித்து நோயை வரவிடாமல் பாதுகாக்க வேண்டும்.

எம்மில் பலர் தடிமன், காய்ச்சல் என்றாலே வார்ட்டில் படுத்தால்தான் சுகம் வரும் என்ற நிலையிலுள்ளார்கள். எனவே இந்நிலையிலிருந்து மாறி சிறிய நோய்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரியை நாடாது நிவாரணம்காண்பதற்கு பழக வேண்டும்.

### இரத்ததானம்

ஹெலிகொப்டர், பொம்மர் அவ்ரோ, ஷெல் தாக்குதல்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டதால் அவற்றினால் காயப்பட்டு இரத்தப் பெருக்கெடுத்து இரத்தம் வழங்கப்படாமையினால் பலர் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டவண்ணமிருக்கின்றன. எனவே இந்த இக்கட்டான காலகட்டத்தில் இரத்ததானம் செய்வதற்கும் நாங்கள் எல்லோரும் முன்வரவேண்டும்.

இரத்ததானம் செய்தால் இரத்தம் குறைந்து விடும் மூட நம்பிக்கை எம்மில் பலரிடம் வளர்ந்துள்ளது. இரத்தம் தானம் செய்வதன் மூலம் புதிய இரத்தம் உருவாகி ரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது என்ற உண்மையை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

### வரலாற்று கடமை

எமது பிரதேசத்தில் பல மூளைசாலிகள், உற்பத்தியாளர்கள் முதலீட்டார்கள் இருக்கிறார்கள் இவர்கள் ஒவ்வொருவரும் நினைததால் பொருட்பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்திக்க முடியும்.

ஆரம்பத்தில் சிறிய அளவில் அல்லது பரீட்சார்த்தமாக இதில்ஈடுபடுவதன் மூலம் வெற்றியை நோக்கிச் செல்லலாம்.

இன்று பனம் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள மவுசு, நாளை இங்கு உற்பத்தியாகும் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்படலாம் என்பதை உணர வேண்டும்.

இந்த இக்கட்டான வேளையிலும் பல தேவையற்ற சிறிய காரியங்களுக்குப் பணத்தைக் கரைக்கும் நாம் உருப்படியாக எதையாவதுசெய்தால் என்ன? மேற்குறிப்பிட்டவர்கள் இதை ஒரு வரலாற்றுக் கடமையாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

''அந்த நாளையில் காலமை எழுந்தால் பழந் தண்ணியும், குரக்கன் புட்டும் திண்டு வளர்ந்த உடம்பு'' என்று இன்றும் பல வயோதிபர்கள் சொல்வதை எமது காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அத்துடன் அவர்கள் பலசாலிகளாகவும், நீடித்த ஆயுள் உள்ளவர்களாக இருப்பதையும்அவதானிக்கிறோம். எனவே பணத்தைச் செலவழித்துத் தேநீரையோ அல்லது குளிர் பானங்களையோ அருந்துவதைத் தவிர்த்து, பழந்தண்ணி குடிக்கப் பழகுவதன் மூலம் சீனித் தேவையை இல்லாமற் செய்யவேண்டும்.

இதே போன்று இன்னும் பல தேவைகளைக் குறைத்து இந்த நெருக்கடி நிலையிலும் வாழப்பழகுவது அவசியமாகும்.

# கலவர காலத்தில் செலவில்லாத வைத்தியம்

போர்க்காலம், போக்குவரத்து வசதிகளில்லை, மருத்துவமனைகளை அடையமுடியாத நிலை, இந்நிலையில் நோய்கள் ஏற்பட்டால் என்ன செய்வது? இயற்கை தந்த செல்வத்தைப் பாவித்து நோய்களைக் களைவோம்.

### இதய நோய்கள்

இந்நோய் இரத்தக் கொதிப்பு நெஞ்சுவலி, மார்புவலி போன்று ஏற்படுகின்றது. மனிதனுக்கு வயது செல்லச் செல்ல இரத்தக் குழாய்கள் விரிந்து கொடுக்கும் தன்மையை இழந்துவிடுவதினால் இதயம் அதிகமாக வேலை செய்ய வேண்டி ஏற்பட்டு இரத்தக் கொதிப்பு ஏற்படுகின்றது. இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படும் பொழுது அடைப்பு இருந்து அழுத்தம் ஏற்படுகிறது, இந்நோய்களினால் பாதிக்கப்படுகிறவர்கள் எக்காரணம் கொண்டும் மது பானங்கள் பாவிக்கப்படாது.

பேரீச்சம் பழத்தை பாலில் வேகவைத்து பசு வெண்ணெயைக் கலந்து சாப்பிட்டால் குணமாகும். அருகம்புல்லை வேருடன் எடுத்து சாறு எடுத்து சிறிது தேனைக் கலந்து சாப்பிட்டால் இதய நோய் எதுவாக இருந்தாலும் குணமாகிவிடும். அருகம்புல் அற்புதமான, இரத்தம் கட்டிக் கொள்வதால் இதயநோய் ஏற்படுகிறது, இதைத் தவிர்ப்பதற்கு உணவில் நிறைய வெங்காயம் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும். ஷெல் அடியினாலும் குண்டு வெடிப்பினாலும் இதயம் படபடக்கிறது. செம்பருத்திப் பூவை கசாயம் போட்டு பாலோடு அருந்தினால் படபடப்பு இருக்காது. விட்டமின் 'இ' அதிகம் கீரை வகைகளில் உண்டு. கீரை வகைகளை அதிகம் உட்கொண்டு பருப்பு, வாழைக்காய், உருளைக்கிழங்கு போன்றவற்றை தவிர்த்து விடுங்கள். ஆஸ்பிரின் கலந்த மாத்திரைகளைத் தொடாதீர்கள்.

நெஞ்சுவலி ஏற்படுகிறவர்கள் விளாம்பழம் சாப்பிட வேண்டும். இது இவர்களுக்கு மிக அவசியம். அடிக்கடி நெஞ்சுவலி ஏற்பட்டால் உழுந்தம் மாவைக் களியாகக் கிண்டிச் சாப்பிடுங்கள் வலி நின்றுவிடும்.

அடிக்கடி மார்பு வலி ஏற்படுவதென்றால் வயிற்றில் புளிப்பு நீர் அதிகம் என்பதுதான் அர்த்தம். எலுமிச்சம் பழத்தையும், இஞ்சியையும் சாறாக்கிப் பருகினால் மார்பு வலி ஏற்படாது.

இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் அதிகம் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். அன்றாட உணவில் வெந்தயக் கீரையையும், வெள்ளரிக் காயையும் சமையல் செய்து உட்கொண்டால் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம் வெள்ளைத் தாமரைப் பூவை நீரில் வேகவைத்து, அந்நீருடன் தேனை விட்டு அருந்தினால் இரத்தக் கொதிப்பு கட்டுப்படும்.

'கொலஸ்ட்ரால்' என்ற பொருள் எண்ணெயிலும், கொழுப்பிலும் அதிகம் இருக்கிறது. வெண்ணெய், தேங்காய் எண்ணை போன்றவற்றைத் தவிர்த்து நல்லெண்ணை மட்டும் பாவித்தால் நன்று. இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அதிகம் இருந்தால் இருதய நோய்கள் ஏற்பட்டு இயற்கை அடையவேண்டி ஏற்படும்.

தொகுப்பு:
க. முத்துக்குமாரசாமி
(செயலாளர்—
ஊரெழு சுகாதாரக் குழு.)

# இவ்வாரம் உங்கள் பலன்

(22-07-90 முதல்
28-07-90 வரை)

மேடம்— மேடராசியினருக்கு இவ்வாரம் தொழில்துறையில் மந்தநிலை இருக்கும். குடும்பத்தில் மனஸ்தாபங்கள் நிகழும். பெரியோர் ஒருவரின் உதவிகள்கிட்டும், எதிர்பாராத செலவினங்களுண்டு, சுமாரான வாரம்.

இடபம்-இடபராசியினருக்கு இவ்வாரம் தொழில் முடக்கமுண்டு, குடும்பத்தில் சுமுக நிலை இருந்துவரும், எதிர்பாராத பணஉதவி கிட்டும், பொதுத்துறைகளில் அதிக ஈடுபாடு இருக்கும், லாபகரமான வாரம்.

மிதுனம்- மிதுன ராசியினருக்கு இம்மாதம் குடும்பத்தில் சந்தோசம் நிலவும். மனைவியால் பொருள்லாபமுண்டு, எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும், சகோதர உதவியுண்டு. பயணங்கள் தடைப்படும், அதிர்ஸ்டமான வாரம்.

கடகம்-கடக ராசியினருக்கு குடும்பத்தில் ஒற்றுமை நிலவும், தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிட்டாது, தூரத்து உறவினரின் செய்தி மகிழ்ச்சி தரும், மக்களால் கவலையுண்டு, நன்மை தீமைகள் கலந்த வாரம்.

சிங்கம்-சிங்க ராசியினருக்கு இவ்வாரம்மறைமுகமானசெலவுண்டு, குடும்பத்தில் முரண்பாடு நீடிக்கும், சென்ற இடத்தில் கௌரவம் பாதிக்கப்படும், நண்பர்களால் காரியம் கைகூடும், எதிர்பார்ப்புகள் தாமதமாகும் வாரம்.

கன்னி-கன்னி ராசியினருக்கு இவ்வாரம் குடும்பத்தில் சந்தோசம் நிலவிம், கடன்கள் வசூலாகும், உறவினர் வேற்றுமை சுமுகமாக தீரும், தொழில்முன்னேற்றக் குறைவுண்டு, வெளியிட செய்தி செய்தியொன்று கவலைதரும், நன்மைதரும்வாரமாகும்.

துலாம்-துலாம் ராசியினருக்கு தொழில்துறைகளில் பகமை நிலவும், குடும்பத்தில் கருத்துமோதல் உருவாகும், கைப்பொருள்செலவாகும் உறவினர் உதவிகோருவர், உத்தியோகத்தர்களுக்கு அலைச்சலுண்டு, மனச்சுமைமிகுந்த வாரம்.

விருச்சிகம்-விருச்கிக ராசியினருக்கு குடும்பம் கோயிலாக விளங்கும், அச்ச உணர்வு உருவாகும், இடப்பெயர்வுஉண்டு, பணமூலமான கவலையுண்டு, தொழில்துறையில் கஸ்டங்களுண்டு, அலைச்சல்மிகுந்த வாரம்.

தனுசு—தனுசு ராசியினருக்கு குடும்பத்தில் வேற்றுமையிருக்கும், பண லாபங்கள் சித்திக்கும், நண்பர் ஒருவரை பகைத்துக்கொள்ளலாம். தாய்வழி நினைவு அதிகரிக்கும், தொழில் பாதிப்புண்டு. ஏற்றத்தாழ்வு மிக்க வாரம்.

மகரம்-மகர ராசியினருக்கு இவ்வாரம் குடும்பத்தில் குறுக்கீடு இருக்கும், பணமூலமான பிரச்சனை தீரும், மக்களால் கவலையுண்டு, பொதுப்பிரச்னையில் மாட்டிக்கொள்ள நேரும், அந்நியர் பகையுண்டு, அதிர்ஸ்டமற்ற வாரம்.

கும்பம்-கும்ப ராசினருக்கு குடும்பத்தில் வேற்றுமை குறையும், பணம் சம்பந்தமாக கவலையுண்டு, உறவினர் ஒருவரின் செயல் மனவேதனை தரும், கல்வி சம்பந்தமான முயற்சி பலிதமாகும், தொழில் தொடர்ந்து பாதிக்கும், நன்மையான வாரம்.

மீனம்-மீன ராசியினருக்கு இவ்வாரம் குடும்பத்தில் சந்தோசமும் ஒற்றுமையும் இருக்கும், புத்திரர் பாராட்டப் படுவர், பொதுத்துறையில் ஈடுபாடு அதிகமாகும். தொழிலில் லாபமுண்டு, எதிரிகள் பிணக்கு நல்ல முடிவைத் தரும், எதிர்பார்த்த உதவிகிட்டும், வெற்றிவாய்ப்பு தரும் வாரம்.

- ஜோஸ்யர்

## தமிழ் மக்கள் மீதான

# இராணுவத் தாக்குதலுக்கு இந்து பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அப்பாவித் தமிழ் மக்கள் மீதும், சமய வழிபாட்டுத் தலங்கள் மீதும் அரசபடைகள் தினமும் மேற்கொண்டு வரும் ஷெல், விமானத் தாக்குதல்களை யாழ் மாவாட்ட இந்துஇளைஞர் பேரவை வெகுவாகக் கண்டித்துள்ளது.

பேரவையின் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் இராணுவத் தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (54)

### இராசி பலன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வியால் துன்பம், தாயார் உதவி.

தனுசு; நோய் வாட்டும், மனச்சுமை, மக்களால் செலவு, தூரத்துச் செய்தி.

மகரம்; காரிய பலிதம், கடன் வரவு, சகோதர உதவி, வீட்டில் சந்தோசம்.

கும்பம்; எதிரிகள்தொல்லை, கைப்பொருள் செலவு, வீண் விரயம், பயனற்ற செயல்.

மீனம்: குழப்பமடைதல், குடும்ப விரிசல், பழைய நினைவு, தொழில் நஷ்டம்.

- ஜோஸ்யர்

### மண்மீட்பிற்காக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புக்கள் தனிப்பட்ட நபரின் வகுப்புகள் நிறுத்துவதற்காக கோருதல்.

க.பொ. த(உயர்தர) பரீட்சைக்கு ஆகஸ்ட் 10 இல் வடக்கு கிழககில் மாணவர்கள் ஒன்று திரண்டு பரீட்சை நடாத்தினால் பகிஸ்கரித்தல். அத்துடன் வடக்கு, கிழக்கு மாணவர்கள் ஏனைய பகுதிகளில் பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்கு தோற்றுவதனை தடுத்தல். இவ்வாறான நியாயமான கோரிக்கைகளை புறக்கணித்து பரீட்சைக்கு தோற்றினால் எமது விரோதிகளாக கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதகுரு அடித்துக் கொலை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு காத்தான் குடிப் பகுதியில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டதுடன், அவரின் உதவியாளர் ஒருவர் மின்கம்பத்தில் கட்டப்பட்டு கற்களால் எறிந்து கொல்லப் பட்டார் என்று தெரியவருகிறது. [வி]

### வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''தாய்நாட்டிற்காக இந்தப் பொறுப்பை ஏற்பதில்தான் உறுதியாகவே இருக்கின்றேன்'' என்று அவர் மேற்படி பேட்டியில் தெரிவித்தார்.

### விமானத்தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கானிக் உட்பட மூவர் பலியாகினர்கள். கிளிநொச்சியில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் கரடிப்போக்கில் சில கடைக்கட்டிடங்கள் பெற்றோல் நிலையம் முதலானவை சேதமாகின.

பரந்தன், குமரபுரம், உமையாள்புரம், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, காஞ்சிபுரம், பாம்புக்கமம் பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (83)


### மன்னாரில்

5(-ம் பக்கத் தொடர்ச்சி)

'பவல்' கவச வாகனத்தை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைக் காரியாலயத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த இந்த வாகனத்தை பொது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

மேற்படி வாகனம் எதுவித சேதமுமின்றி நல்ல நிலையில் இருக்கின்றது. மன்னாரிலிருந்து இவ்வாகனத்தை விடுதலைப் புலிகளின் போராளிகள் காட்டுப்பாதைகளின் ஊடாக மிக சாதுரியமாக யாழ் நகருக்கு எவ்வாறு கொண்டுவந்தார்கள் என்பதை வீடியோ படம் மூலம் பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது. (வி)



விடுதலை புலிகளினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டபொலிஸாரின் ஒரு பகுதியினரையும் மன்னார் கொண்டாச்சி மரமுந்திரிகை பண்ணை இராணுவ முகாம் தாக்குதலின் போது புலிகளினால் கைப்பற்றப்பட்ட பவல் கவச வாகனத்தையும் படத்தில் காணலாம்

### புலிகளிடம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றோம்: உங்களை தற்போது விடுதலை செய்வதுபோல் மற்றவர்களையும் படிப்படியாக விடுதலை செய்வோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகரட்ணம் (யோகி) கிளிநொச்சிபொலிஸ் நிலையத்தில் சரணடைந்த 17 பொலிஸாரையும், உள்ளூர் பத்திரிகையாளர் முன்னிலையில் விடுதலை செய்யும்போது கூறினார்.

விடுதலை செய்யப்பட்ட பொலிசார் சிலரைப் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்ட போது விடுதலையான ஒரு பொலிஸ்காரர் கூறியதாவது!

இலங்கை அரசாங்கம் இனத்துவேஷம் காரணமாகத் தமிழ் மக்கள் மீது அடக்குமுறையையும் பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து, அவர்களைக் கொன்று குவிப்பதற்கு எம்மைப் பயன்படுத்திய தனாலேயே நாம் விடுதலைப் புலிப் போராளிகளிடம் சரண் அடைந்தோம்.

''அவர்கள் எம்மை இவ்வளவு நாளும் மிகவும் கண்ணியத்துடனும், சகோதரபாசத்துடனும் பராமரித்து வந்தார்கள். எமக்கு அவர்கள் எதுவிதமான துன்புறுத்தல்களையும் தரவில்லை.''

'போக்குவரத்து வசதி இல்லாத இந்த வேளையிலும், விடுதலை செய்யப்பட்ட எம்மை எமது சொந்த இடங்களுக்கு பாதுகாப்புடன் அனுப்பிவைப்பதாகவும் உறுதி அளித்துள்ளார்கள்''

விடுதலை செய்யப்பட்ட 17 பொலிஸாரில், 8 தமிழர்களும் 9 முஸ்லீம்களும் அடங்குவர் இவர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள் அனைவரும் இவ்வருட ஆரம்பத்தில்தான், பொலிஸ் இலாகாவில் சேர்ந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

விடுதலை செய்யப்பட்ட பொலிஸாரில் சிலர் ''தாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

விடுதலை செய்யப்பட்ட பொலிஸாரின் விபரங்கள் பின்வருமாறு:

டி. வைரமுத்து வாசன் (வயது 20) மட்டக்களப்பு), என். ஏ. தாகீர் வயது (21) கிண்ணியா, ஏ. நவாஸ் (வயது 19) அக்கரைப் பற்று, எம், வரதராஜன் (வயது 23) மட்டக்களப்பு, ஏ. ஆர். பைஸன் (வயது 21) அம்பாறை, றேயல் றபாடீன் (வயது 19) அம்பாறை, சி. சிவயோகராஜன் (வயது 28) களுவாஞ்சிக்குடி, எஸ். ரி. எம். மின்ஹஸ் (வயது 22 பொதுத்துவில், த, ரவீந்திரராஜன். (வயது 23) திருமலை, ஏ. எல். எம். அஸீஸ் (வயது 21) அம்பாறை, எம்.ஐ-எல், சையது சலாக் (வயது 20) அட்டாளைச்சேனை. துரைராஜா மனோகரன் (வயது 22) வவுனியா, எஸ் வில்ஸன் (வயது 24) விநாயகபுரம் திருக்கோவில், ரி பதுதீன் (வயது 22) நிந்தாவூர் அம்பாறை, சி. பற்குணம் (வயது 22) கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு, எஸ். எல். எம். முகமட் பஸீஸ், (வயது 21) அட்டாளைச்சேனை அம்பாறை, சி. பாஸ்கரன், (வயது 21) கழுதாவளை மட்டக்களப்பு. (வி)

### குறிஞ்சாத்தீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுவருகிறது. பல இராணுவத்தினர் பலியாகியுள்ளதாகவும் எஞ்சியோர் ஆனையிறவை நோக்கி செல்ல எத்தனிப்பதாகவும் புலிகள் போராளிகள் தடுத்து தாக்குதல் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (83)

## கொக்காவில் சம்பவம்: 18போராளிகளுக்கு வீர வணக்கம்

### - புலிகள் மகளிர் முன்னணி

(யாழ்ப்பாணம்)

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலில் வீர மரணம் அடைந்த 18 விடுதலைப் புலிகள் வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

''இனவாத அரசின் அரக்கத்தரமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முடிவுகட்டி, எமது தாயகப் பூமியைச் சுதந்திர நாடாக மலர வைக்கத் தினமும் வீரம் செறிந்த போரில், வீர வணக்கத்தைத் தழுவிக்கொள்கின்ற வீர வேங்கைகளுக்கு எங்கள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றும் மேற்படி மகளிர் முன்னணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் தமிழர்கள் வர்த்தகம் செய்ய முடியாது!

### இராணுவ அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வவனியா நகரில் தமிழர்கள் இனிமேல் வர்த்தகம் செய்யமுடியாது. என்று அங்குள்ள இராணுவ அதிகாரி எச்சரிக்கை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா நகரிலுள்ள தனது வர்த்தக நிறுவனத்திலிருந்து பொருள் ஏற்றி வரச் சென்ற வர்த்தகர் ஒருவரே இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டாராம்.

வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் தமிழர்களுக்குச் சொந்தமான பல வர்த்தக நிறுவனங்கள் எரிக்கப்பட்டுள்ளதுடன் பல நிறுவனங்களில் கொள்ளையும் நடத்தப் பட்டுள்ளது.

உங்கள் கடைகளிலுள்ள பொருள்களை எடுத்துச்செல்லுங்கள். இனிமேல் இங்கு வியாபாரம் செய்ய வரவேண்டாம் என்றும் அந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்ட வர்த்தகரிடம் தெரிவித்தாராம்.

### தமிழ்நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தில் அவர்களுக்கு போதுமான பாதுகாப்பும் உணவுப் பொருள்களும் வழங்கப்படும் என்றும் இதற்காக மன்னாரில் ஒரு பாரிய இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதென்றும் இங்குதான் அகதிகள்முகாம் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இச்செய்தி அச்சுக்குபோகும் வரை அமைச்சர் ரஞ்சன்விஜேரத்னவின் மேற்படிகோரிக்கை குறித்து தமிழக முதலமைச்சரின் கருந்து எதுவும் வெளியாகவில்லை.

## வீடுகள் தோறும் பதுங்கு குழி

(கொக்குவில்)

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் மக்கள் தற்பாதுகாப்பிற்காகத் தங்கள் வீடுகள் தோறும் பதுங்குகுழிகளை அமைத்து வருகிறார்கள்

### சுன்னாகம் மின்சார சபையால்

## யாழ். ஆஸ்பத்திரிக்கு முழுநேர மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் அமைந்திருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் மின்சாரத் தடையினால் ஸ்தம்பித்த வைத்திய சேவை நேற்றுமுன்தினம் சுன்னாகம் மின்சார சபையின் உதவியினால் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணி முதல் சுன்னாகம் மின்சார சபை இவ்வைத்திய சாலைக்கு 24 மணி நேரத் தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்கிவருகிறது,

மின்சார சபையினரின் இச்சேவையை அடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இருக்கும் குளிரூட்டிப் பாதுகாக்க வேண்டிய அதிமுக்கிய மருந்து வகைகள் வைத்திய சேவைக்கான உபகரணங்கள் போன்றவற்றை மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெருக்கடியான இக்கால கட்டத்தில் அதிகரித்துவரும் நோயாளரின் நலன்கருதி மின்சார சபை மானிப்பாய் வைத்தியசாலையுடன், மந்திகை, சாவகச்சேரி ஆகிய வைத்தியசாலைகளுக்கும் மின்சாரத்தை 24 மணி நேர தொடர்ச்சியான பாவனைக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது. (56)

## பதுங்குகுழி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பதுங்குகுழி அமைப்பதில் உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் புனித பற்றிமா பாடசாலை மாணவர்கள் முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள். பிரஸ்தாப பாடசாலையில் மாணவ மாணவிகள் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் பதுங்குகுழி வெட்டுவதை காணமுடிந்தது. (83)

## நோயாளருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தாக்குதல். ஷெல், விமானக்குண்டுவீச்சுக்களினால் காயமடைந்து மந்திகை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வடமராட்சிப் பகுதியிலுள்ள, தொண்டர் ஸ்தாபனங்கள் பொதுமக்கள் இரவு பகலாக உதவி புரிந்து வருகின்றனர். (54)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

நாம் சேவையாற்றுகின்றோம்

இன்றுமுதல் ஆரம்பம்

தரத்தில் சிறந்த அண்ணா கோப்பியை அரைத்துப் பெறவும், சுவைத்துக் குடிக்கவும் அண்ணா வெல்லம் உட்பட சகல உற்பத்திப் பொருட்களைப் பெறவும் விஜயம்செய்யுங்கள்.

பரிசுப் பொருட்களை உடன் பெறலாம்.

அண்ணா கோப்பிக்கடை

நல்லூர் கந்தசுவாமி கோவில் (தேர்முட்டி முன்பாக) நல்லூர்.

(A-817)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org